உ

கணபதிதுணை.

முருகர்ஒயிற்கொம்மிப்பாடல்.

வேங்கடாசலபண்டிதர்பத்திரரால்

இயற்றியது.

இவை.

திரிசிரபுரம்.

கந்தசாமிபிள்ளை.

அவர்களாற்பரிசோதித்து,

மதுரை புதுமண்டபத்தில் புஸ்தகவியாபாரம்

சண்முகம்பிள்ளை அவர்களால்

திரிசிரபுரம்

தி-சயாபதிபிள்ளையினது

மட்டுவார்குழலம்பாள் அச்சுக்கூடத்திற்


பதிப்பிக்கப்பட்டது.

பவ௵-துலாமீ.

சென்னை சிந்தர்த்திரிபேட்டை சாமிநாயக்கர்வீதி-நெ-௪௫.

உ

கணபதிதுணை.



முருகர்குயிற்கும்மிப்பாடல்.

துதி - கவி.

மந்திரசர்டாக்ஷர சண்முகவிலாசர் *
மணந்தவள்ளிச்சரிதையெனும் வண்மைதன்னை *
விந்தைதருமொயிற் கும்மிக்கீதமாக *
மேதினியோர்படித்தெழுதி மிகக்கொண்டாட *
பைந்தமிழாலடியேன்யா னுரைத்தபுன்சொற் *
பகருமொழிக்கருள்புரியும் பரமனீன்ற *
சுந்தரஞ்சேர்திடமான கருத்தைக்கூட்டுந் *
தும்பிமுகக்கணபதியே துணைசெய்வாயே. (க)

கொம்மி.

தென்பரங்குன்றினின்மேவுங்குருபரதேசிகன்மேற்கொம்மிப்பாட்டுரைக்க,சிகரத்திரு-மகரக்குழை-சிகமெய்ப்புகர்-வடிவைத்தருந்-தில்லைவிநாயகன்காப்பாமே. (க)

வள்ளியெனும்பசுங்கிள்ளையைக்கந்தன் மருவுங்கதையைக் கொம்மியாக, வாழ்வுற்றிட-நாவிற்றுதி-மேவித்தருள் - பாலித்திடும். வாலைமனோன்மணிதாட்டுணையே. (உ)

சங்கரசம்பு சதாசிவனீன்றருள் சண்முகர்மேற்கொம்மிப் பாட்டுரைக்க, தந்தக்கனி, முந்திக்கிரி, வந்தித்தருள்,விந்தைக்குரு,தந்திமுகவன்றுணையாமே.

முருர்ஒயிற்கொம்மிப்பாட்டல்.

மந்திரபூரணக்கந்தனைவள்ளிமணந்தசரிதைவகையறிந்து, வாசத்
துடன், நேசப்பிர - காசத்தமிழ், பேசப்புகழ், மண்டலமெங்கு நிறைந்
திடவே. (௪)

தேகஞ்சிறந்தகுயின்மொழியைக்கண்டு,காகந்தொனிசெய்தவார
துபோற்,சிந்தைககனி, விந்தைப்பிர, பந்தத்தமி ழுந்தத்துடன்,செப்
புகிறேனொருபுல்லறிவேன். (௫)

காரிகைநன்னூலிலக்கணங்கற்றுக், கவிசொலுநாவலர்தங்கண்முன்
னே, கல்லாதவன், இல்லாதவன், வல்லாண்மையாய், சொல்லும்பிழை,
கற்றறிந்தோர்கள்பொறுப்பீரோ. (௬)

வாணிதமிழ்ச்சித்தார்த்திவருட,மகரத்தினங்களேழ்தேதியினின்,
வறையோன்குரு, விறையோன்தகு, முறைதங்கிய,நிறையன்பதி-மாநா
கில்நன்னகர்வாசன். (௭)

விஸ்வகுலத்திலுதித்தெழுந்த வேங்கடாசலமைந்தனுரைத்தகவி,
விழையுந்தமிழ், தழையுங்கன, கிளியுஞ்சிவ, கழையுந்தரும்,வேலன்கி
ருபைசெய்வார்நிசமே. (௮)

ஓங்கியநாகம்பட்ம்விரிக்கக்கண்டு நாங்கூழுங்கூடநின்றாடுதல்போ
ல், உலகந்தனி, லிலகுந்தமிழ், நிலைகண்டவ,ரிலையங்கொரு, வூமையன்
கண்டகனவதுபோல் (௯)

வீசும்புகழ்தழைத்தோங்கிடவே விஸ்வவேதகுலத்தில கன்றமிழ்
க்கு,வேலன்குண,சீலன்னுமை,பாலன்னனு, கூலன்செயல், வேணுமெ
ந்நாளுந்துணைநமக்கே. (௰)

ஆழிப்பெருங்கடல் வெள்ளத்துக்கொப்பனை,யாகச் சிறுவாய்க்கா
ல்பாய்ந்ததுபோல், யானுங்கவி, யேனென்றொரு,தேனுங்கனி, போலு
ஞ்சொல, வாறுமுகப்பெருமாள்துணையே, (௰௧)

மட்டடங்காதசெந்தாமரைப்பொய்கையிற்,கொட்டியொருபுறம்பூ
த்ததுபோல், வாசன்புகழ், நேசன்திகழ்,தேசந்தனி,லேசம்பிர-மாகவே
சங்கீதக்கொம்மிசொல்ல, (௰௨)

முத்தும்பவளமுங் கோர்வைசெய்தாப்போற்,சித்தமகிழ்ந்து நன்
றாகவுமே,முன்னோர்தமிழ்-சொன்னாபொன - வென்னுசையி,லிந்நாளிலே
மொழியுங்கல்விக்கருள்புரிவீர். (௰௩)

ஆதியந்தமுதற் காரணந்தன்னை, யறிந்துநன்றாகத் தெரிந்துவைப்
போர்,ஆடிப்பணி-சூடித்தமிழ்-பாடிக்கன-வேடிக்கையி,லானந்தங்கொ
ண்டததிசயமே. (௰௪)

வையம்புகழுங்கலைமுனிவன்-சிவமந்திரவேள்விமலைக்கருகே,மவு
னக்குகைய தனிற்சிவ தவமுற்றிய கவனத்தொடு, மாத்திரைக் கோலுந்
துலங்கிடவே. (௰௫)

கையிற்பிடித்ததிருவோடுங்,கறை-கண்டமுங்காதினிற்குண்டலமு

ங்,காணிற்றிரு-மேனிக்கொரு-காவிக்குடை-கோபித்திட,காரல[illegible]ந் தவஞ்செய்தாரே. (௧௬)

சானகிமுன்வந்தமானது போலித்,தவமுனிவன்றனைச்சேறவென்று,தாகக்கழை -வேகத்தொடு-தேகத்திலே-மோகித்திட,தார்வனந்தன்னிலொருமானும். (௧௭)

பொன்னிறங்கொண்டு,புளகிதமாய்மேனி-பூரித்துப்பால்யபிராயமதாய்,பூவைக்குறல்-கூவித்தவ - வேள்விக்கிரி-மேவிக்கன, போகம்விழைத்திடவந்ததுவே. (௧௮)

வந்ததைக்கண்டுகலைக்கோட்டுமாமுனி,சிந்தைகலங்கித்தியங்கிமனம்,மதனக்குளிர்-விதனத்திலே-மருகிச்செய-லுருகித்திரு,மானை மருவிக்கலந்தாரே. (௧௯)

மங்காமலேயஷிகெர்ப்பமிமைப்போதும்,தங்காதென்றேசொல்லும்வாரதுபோன்,மதியைச்சிவ -கதியைத்தரு-முதனைக்கனி-யதுவைத்திடல்,வள்ளிக்குழிதனிலீன்றதுவே. (௨௰)

மானீன்றபெண்ணந்த கானகந்தன்னிலே,வண்ணமணிக்குரலோசையிட்டு,வாலக்குயின் -மானுங்குல-நீலப்பயி-லுஞ்சோபிதம்,மதலைவாய்விட்டழுததுவே, (௨௧)

தேனுங்கனியுங்கிழங்கெடுக்கவென்று,தேடியேவேடர்வரும்வழியிற்,செடியிற்குற - வடிவைத்தர-வடிவைத்திட-நடுவிற்சிறு, செல்வியைகையிலெடுத்தனரே. (௨௨)

கையிலெடுத்துநன்றாகவுமேயந்தக்,கானவர்சேரியிற் கொண்டுசென்றார்,கனியற்புத-மினியைப்புகழ் - தனிதற்புத - வனிதைக்குரா-காரணமாகவளர்த்தாரே, (௨௩)

ஆணிப்பவழக்கயர்முறுக்கி யதிலந்த முள்ள சிறுதொட்டில்கட்டிஆசைக்குற-லோசைத்தமிழ்-பாஷைப்பயில்-பேசித்தின, மன்புடனின்றுதாலாட்டினரே. (௨௪)

ஆரீரரோபெண்ணேயாரீரரோகண்ணே-யராரோகீயாரீரரோ,நளினத்துறு - பழனக்கழை - யிளமற்புத-வளமைத்தமிழ்,நாயகமேபெண்ணேகண்வளராய். (௨௫)

அன்னமே தேனேயென் கண்ணேமின்னேயென்று, ஆவலுடன்கையில்தானெடுத்து, அணிபொற்கனே- மணிவச்சிர-புனிதத்தொடுவனிதைக்கனி,யாடைவெகுபூஷணுதியிட்டார். (௨௬)

கொஞ்சிமதலையை முத்தமிட்டுமிகக்-கோலப்பணிகண் மிகப்பூட்டி, கொத்துச்சர, முத்துப்பணி, வைத்துப்பதி,சித்துப்பெற,கொண்டுகுறவர்மகிழ்ந்தாரே. (௨௭)

ஒன்றிரண்டாகிமூன்றாகிவய தோரைந்துதிங்களுந்தானுகி, ஓடித்தெரு,வீதிக்குளே, வேடச்சிகள்,கூடிந்தின,யோவியமாகவளர்த்தாரே

மாதுவளரும்வளர்ச்சிகண்டேநம்பி-மன்னனுமேநங்கைமாதரசும் மங்கைச்சிமிள்,கொங்கைக்குயில்,தங்கப்பணிஅங்கத்திட்,வள்ளியம்ம னென்றுபேருமிட்டார். (௨௯)

காதுகுத்திப்பஞ்சுதக்கையிட்டுச்சின்னக் காலுக்குக்காலாழி பீலி யிட்டு, கதியிக்கிணை, மதியைப்புனை, கமலத்திரு,வதனத்திலே,கன்னத் தைக்கொஞ்சியேமுத்தமிட்டார். (௩௰)

பாடகந்தண்டைசிலம்பணிந்தார் நல்ல பதக்கஞ்சூடி நுதற்கணி ந்தார், பட்சத்தொடு,மெச்சிப்புகழ்,வச்சிரப்பணி,யிச்சைப்பட,பாவித் துநன்றாய்வளர்த்தனரே. (௩௧)

மங்கையுமிப்படி வேடுவர்சேரியில்- வாலிபங்கொண்டு வளர்ந்திடு நாள்,வரிசைத்துறை, மகளுக்கொரு,மழையற்புத, வரையிற்கன, மாரி யெந்நாளும்பொழிந்ததுவே. (௩௨)

வேள்ளிமலைத்திடலோரத்திலேதினை, விளைககநல்லநிலம்பார்த்து வெட்டுப்பயி-ரிட்டுத்தளிர்,விட்டுக்கதி, ரொட்டும்படி, வேடுவரும்புனக் காடுசெய்தார். (௩௩)

காடுவிளைத்துப்பயிராகிதினைக் கதிரும்வாங்கிமணிபிடித்து, காவி க்கிளி.கூவித்தினை,மேவிக்கதி, ரேறித்திட. கண்டந்தவேடர் கவலைகொ ண்டார. (௩௪)

தங்கையுடன்மைந்தர்வந்துநின்றுநம்-தங்கையெனும்வள்ளிநாயகி யை,தனதாகியே, சுனைமீறியே, தினைதூவியே,புனமீதிலே, தங்கையுட ன் காவல்வைப்பமென்று. (௩௫)

என்றண்ணமார்கள்சொற்றட்டாமலே யந்த வேந்திழைவள்ளிசந் தோஷமதாய்,இன்பக்கடற்,றென்புற்றொரு- சம்பிரத்துட-னம்பிக்கோ, ரேந்திழையுமுயிர்ப்பாங்கியுமாய். (௩௬)

நீருந்தினைவனந்தன்னிலுயர்பர, ணேறிநின்றேகைக்கவண்வாங்கி, நீலக்கிளி-யோலப்பட-சோலைக்குயின்-மேலுக்கிட,நின்றுவிசைகொண் டெறிந்தாளே. (௩௭)

பூரணவேள்விமலைச்சார்பில்,வள்ளி-பொங்குந்தினைப், புனங்கார்க் கையிலே,புவனத்திலே - தவமுத்திய-கவனக்குரு-முனியற்புத,பொதி கைமாமலைவிட்டிறங்கி. (௩௮)

கந்தனிருக்குந்தலந்தோறுஞ்சென்று,கபடனைரதன்சேர்வைசெய் து,காவித்திரு-வேள்விக்கிரி-சோபித்திட-மேவிச்சிவ,காரணமாமுனிவ ந்தனரே. (௩௯)

ஆலோலமாலோலமென்றுசொல்லிவள்ளி, ஆனந்தமாகக்கவணெ றிந்தாள்,அசையத்தன-மசையக்குட-மிசையக்கன-விசையிற்றொரு,வா சைகுரண்டணியோசைசெய்தார். (௪௰)

ஏககலாபரநாரதன்றனிது-வேதோவதிசயந்தானெனவே, இந்தக்

குரல்,சந்தப்பட-வந்தத்தொடு-விந்தத்தொனி - யிதுவும், பெணகுரல்
தானென்று. (௪௧)

யோகத்திலேகண்ணை மூடிநின்றார்சிவ,யோகியெனுந்தவ மாமுனி
வன்,யோசித்ததை-நேசித்துளங்-கூசிப்பிர-காசத்துட், ஞெள்ளுடிவ
ள்ளியைக்கண்டாரோ, (௪௨)

பூரணவாலேமனோன்மணியோயிவள்-பூலோகரம்பையோ பொன்
மகளோ,புவனத்திலே-யிவளுக்கிணை-யெவளேச்சரி-தருமொப்பிட,பூம
ண்டலத்திலுங்கண்டறியோம். (௪௩)

என்றுமுனிவன்பர ணெதிரேநின்று, ஏந்திழைவள்ளிதனைப்பார்த்
து,வேதப்பிர-பாவக்கட-லாசைப்பரி-தாபத்தொடு,வேறுவயணமெடுத்
துரைப்பார். (௪௪)

பேரென்ன வூரென்னவாரம்மா நீசொல்லு, பேதையரோபசுங்கோ
தையரோ,பிரமித்துள -மகிழக்குற- மரபிற்கன - வரமுற்றுனே,பெற்றிடுந்
தாய்தந்தைபேர்சொல்லவாய். (௪௫)

சொல்லுவன்கேளையாமா முனியேநாங்கள், சொல்தவறாத குறச்
சாதி,சொந்தக்கிளை-பந்துக்களு-மிந்தக்கிரி-விநதைப்புகழ, சூழுஞ்சுத்
தூரங்குடியிருப்பார். (௪௬)

தந்தைநம்பிராசனெங்களையாவெந்தன், தாய்பேரும் நங்கையென்
றேசொல்லுவார், தவமுத்திய-சிவசுந்தர-மவுனங்கொடு-புவனந்தனில்
சாமிதிருநாமஞ்சாத்துமென்றார் (௪௭)

நானிலமெங்கும் புகழ்படைத்தவள்ளி, நாயகியேசொல்லக்கேளு
மம்மா,நாதம்பல-கீதம்பெற-வேதங்களை-யோதும்புகழ்,நாரதனென்று
பெயருரைப்பார். (௪௮)

கேளுந்தினை வனம்வாழ்மயிலேயுனக், கேத்தமணவாளன்பார்த்து
வந்தேன், கிருபைக்கடல்-தருசுப்பிர-மணியத்துரை-யுனைமெச்சியே,கி
ஞ்சுகம் போற்கூடிக்கொஞ்சிடவே, (௪௯)

வேதமுனிசிவ ஞானத்திலே யும்மை,மெத்தப்பெரியோரென்றே
பொறுத்தேன்,விகடத்தொழில்-சகடத்திலே-புகழ்கெட்டினி-மருடச்
சடை, வீணுகக்கொண்டுமுடித்தாயே. (௫௰)

கந்தனைமேவிக்கலந்ததாலுன்,களங்குறையாமோ, குறக்கொடி
யே,கள்ளத்தொழி - லுள்ளத்திலே-யெள்ளத்தனை-சும்மாநீ,கபடமென்
றுநீனையாதே. (௫௧)

வேதஞ்சிறந்ததவமுனியே யுந்தன் வித்தைக்ளொன்னிடஞ் செல்
லாதே,மெட்டுப்பயி-லொடக்குளிர் -விட்டுங்கடை-கட்டுக்கதை,மே
ன்மைக்குறக்குலநாமல்லவோ. (௫௨)

தேசங்கடோறுங் குறம்பாடிக்கொண்டு திரியுமுங்கள்குறச்சாதி

சின்னத்தொழி,லெண்ணத்திலே -யுன்னிக்குலம்-பின்னப்பட்,சீ ருங்கு லந்ததறியேனே. (௫௩)

தாறுமாறுப்மொழிபேசாதேயுன்னைத், தவமுனியென்றுனுசொல் வாறேர,சாதித்துளம்-பேதித்திட-வாதித்தனே-யேதிப்படி,சற்றுமதியா மற்பேசுகிறாய். (௫௪)

துள்ளுமெருதுபொதிசுமந்தகதை,தொல்லுலகோர் சொல்லக்கே ட்டிலேயோ ,சோரத்தன-பாரத்திலே-சேரத்தன-தாயுற்றவர், சுப்ரமண் யக்கந்த நாதனல்லோ. (௫௫)

ஆர்சொன்னாரிம்மதி நாரதனேயிந்த வழகிலா ச்சொல்லை யெடுத்து ரைத்தாய்,அட்முற்றொருநடனத்தொழில் -திடமுற்றிய-தடமிட்டிடு,ம ப்புறம்போயிங்கே நில்லாதே. (௫௬)

வாலசரவணவேலனுனக்கேத்த மாப்பிள்ளை-தானவள்ளிநாயகியே வனமிருந்தொளி-ரிங்கிதத்திரு-மங்கிலியத்துட-னுன்கழுத்திலே,மாலை யிடநல்லவேளையிதே. (௫௭)

மேய்பன்புகொண்டசன்யாசி,யென்றேயிந்தவேளம்மட்டுஞ்,சும்மா கான்போறுதேதேன் -மிஞ்சுந்தொழில்- வஞ்சந்தா-நெஞ்சந்தனி,லஞ்சு ம்படி,வேடர்கள்தேடிவருவாரே. (௫௮)

வள்ளியெனுஞ்சிறு பெண்ணேயுனக்கந்த மாப்பிள்ளை வெலனே தான்சரியாம்,மாலுஞ்சுக- மாலும்விழி -வேலுந்தனத்-தாலுந்த ர,வாலி ங்கனக்காலம்வரவில்லையோ. (௫௯)

ஆரணியந்தனிலொருநொடியிலந்த, ணண்ணமா ரேழ்வருந்தான் வருவார், அடமாய்வெகு-திடமாயுயிர் -படவேதனே-தொடுவாருனை, ய ப்புறம்விசனப்படவேண்டாம். (௬௰)

நல்லசுப்தினவேளையிலேயுனை நாதன்சிவகிரிவேனுமே, நாளைக் கலி,யாணஞ்செய -மேளத்தொடு-தாளத்தொனி-நாரதன், வேடிக்கை பார்ப்பேனென்ருன். (௬௧)

வீண்சம்பரதாயம் படியாதேயிங்கே, வேறேதொழிலில்லை யோ முனியே,வேசைப்பயில் -பேசச்சனி -யாசிக்கிது-நேசிக்குமோ,,விண் ணுட்டுநாரத மாமுனியே. (௬௨)

எந்தவிதஞ்சொல்லி வள்ளிக்குச்சம்மத மில்லையென்றே முனிதா ன்திகைத்து, வெங்கும்பிர-சங்கந்தர-செங்கண்ணழல், பொங்கும்படி யெங்கிநின்றே மூச்சைவாங்கிநின்றார். (௬௩)

செல்வக்குறமின்திருவடியைக்கண்டு, சித்ரமடலி லெழுதவென் றே,சிந்தித்தவள்,கந்தர்க்கிணை-பந்தத்தொடு-சொந்தப்பட,சேருறும்ப டியாய்முடிக்கவென்று. (௬௪)

பாதாதிகேசமுதற்ப்ரியந்தம் பைந்தொடிவள்ளித்-திருவழகை,ப டியத்திரு,முடியச்சுத -மடலித்திரு-வொளிமைபத்தரு-பார்த்து நன்றாக

வளைந்தாரே. (௬௫)

கார்நிறங்கொண்டகுழலெழுதியதிற், கமலமல்லிகைப்பூவெழுதி, கருணைப்பெருநுதலிற்புகழ்-கமலத்திரு-வழகைச்சரி,கண்டுவமானங் கலந்தெழுதி. (௬௬)

வேலவிழிக்கஞ்சன மையெழுதியதின்,மேலேதனுசு நுதலெழுதி விசும்புகழ்,நேசன்திகழ்- வாசன்பிர-கர்சந்தர-மேலேயதிலொரு பொட்டெழுதி. (௬௭)

வள்ளைத்தண்டைப்போலே காலெழுதியதில்,வச்சிரத்தொங்கல் முருகெழுதி,மாரன்குயில்-கூறுந்தொனி -மீறும்படி,சேருஞ்சுக,மன்மதப்பார்வையுங்கண்டெழுதி. (௬௮)

செண்பகம்போல்நாசி கண்டெழுதியதிற், சிங்காரமூக்குத்தி நகசுருவெழுதி, சேலுங்கயல்-போலும்விழி-பாலுங்கனி -போலுங்கித, செண்பவழவிதழ்கண்டெழுதி. (௬௯)

மோகனமுத்துப்போற் பல்லெழுதியதின், முல்லையரும்பும் நகையெழுதி,முனிவோர்களு-மினிதாயொரு-மனதாகிய-கனிபோலவு,மோகித்தருந்தும் படியெழுதி, (௭௰)

காமன்கணைதீட்டுஞ்சாணையைப் போலக்,கபோல மிரண்டையுங் கண்டெழுதி,கதியுஞ்சுக-மதியுந்தர- முதிருஞ்சுவை-மதுரம்பெற,கன்னிக்கமுகுமிடறெழுதி. (௭௧)

கச்சணிகும்பத்தனமெழுதியதிற், காமரசத்தைக் கலந்தெழுதி,கண்டஞ்சியே-நின்றும்புகழ் - கொண்டுஞ்சுக -மண்டும்படி,கழையைப் போலிருதோளெழுதி. (௭௨)

தங்கப்பணிகண்மிகுந்தெழுதியதிற், சங்குமணியைக் கலந்தெழுதி,தாகத்தொடு- மோகக்கழை- தேகத்திலே- மோகித்திட,சம்பரமோகையுங்கண்டெழுதி. (௭௩)

மால்கண்வளருந்தளிரதுபோல் நல்ல வயிறுமுந்திச்சுழியெழுதி, மாரன்றனை-மீதுங்கன - தேருந்திரு-நாளுந்தர-மன்மதன்சின்னங் கடாமெழுதி. (௭௪)

கஞ்சமலர்க்கரம்ரண்டெழுதி யதிற், காந்தாழம்பூவைக்கனிந்தெழுதி, கானக்குற-மானைத்திரு-மேனிக்கழ-காய்வைத்தொரு- கர்ப்பனையாயிண்டகண்டெழுதி. (௭௫)

ஆசைவிளையுங் களஞ்சியத்தைப்ப்ர, மானந்த மாகியதேன் கூட்டை, ஆருங்களி - கூறுஞ்செயல்-தேருஞ்சுக-மீறும்படி, யல்குல்படத்தையுங்கண்டெழுதி. (௭௬)

வன்னச்சரிகைத்துயிலெழுதி - யதின்மாதளம்பூவைச் சிறந்தெழுதி, மடமாதர்கள்-திடமீறிய-துடைதானொரு-படமீதிலே, வாழைநிகர்த்திடத்தானெழுதி. (௭௭)

நண்டைப்போலமுழந்தாளெழுதியதில்-நல்லவிரால்க்கெண்டைக்காலெழுதி, நளினத்திரு - வடிவைச்சொலு - மொழியைத்திக- ழொளிவைத்தருள், நான்முகன்புத்தகம்போலெழுதி. (எஅ)

வள்ளியழகைச்சுகமடலிற்கண்டுமகிழ்ந்துநாரதமாமுனிவன், வாசனைக்கும்-ரோசனுக்கிவ-ளைசமுற்றது வேமகத்துவ-மந்திரக்கதன்னுக்கோதவென்றே. (எகூ)

வெள்ளிமலைப்புனம்விட்டகன்றேயந்த வேதமறைமுனி நாரதனும், விந்தைக்கிரி-மைந்தர்க்கொரு-கந்தர் கு-வளர்ந்தக்குயில்,வேடிக்கையாய்வழிகூடச்சொன்னார். (அய)

சித்திரமடலைக் கையிலேந்திக்கொண்டு, சென்றுமுனிவன்விரைந்தேகி, சேவற்கொடி-கூவத்தினஞ் - சோபித்திட-வாழ்வுற்றிடுஞ்-சிவகுமாரனைவந்துகண்டார். (அக)

கண்டவுடன்முனிதெண்டனிட்டு, அந்தக்கந்தனையும்வலமாக வந்து, காதுக்குளே-யோதிச்செயல்-போதித்தொரு- மாதுற்றிடுங்-காரணந்தான்சொலக்கேளுமென்றார். (அஉ)

ஐயனேயென்குருவேசாமி யிந்தவண்டருலகெல்லாம்பார்த்துவந்தேன், அதிமோகன-ரதியோயிவள்-சதிபூரண-மதிதானென-வாச்சரியஞ்சொல்லக்கேளுமென்றார். (அங)

தென்பொதிகாசலம்விட்டிறங்கியிந்த, தேசங்கள் சுத்திவரும்வழியில் - செகமோகினி- யிவளோகன-சுகமேவிய-மகள்சீருடை-தெய்வமடந்தையைக்கண்டுவந்தேன். (அச)

மின்னிம்பிரகாசவிளக்கொளியோவிவள் மெல்லியர்க்கெல்லாங் குலதெய்வமோ-வேதனிப்படி-மாதொருத்தியை - சூதெனக்கப - டாய்வித்தது-வேடர்தினைப்புனங்காக்கவென்று. (அரு)

வாயினாற்சொல்லவுங்கூடாது, கண்டான்மற்றொரு பெண்களைத்தேடாது- மங்கைக்கிவ-ளங்கப்பணி- தங்கஞ்சிலை-யுங்கற்பினை-மானைமடலிலெழுதிவந்தேன். (அசு)

பன்னிருகண்ணிலுங்கந்தசுவாமி நீயாருமென்றே மடற்கைக்கொடுத்தார்பாதபொற்கம-லாசனத்திலே,நீதமுற்றொரு - சூதகற்றியே - பணிந்துநாரதன்தெண்டனிட்டான், (அஎ)

கந்தன்சுகமடற் கைதனில்வாங்கியே கண்சிமிட்டாமனின்றே திகைத்து - கவலைக்கடல்-பெருகித்திரு-புவனத்திலு-மிவளுக்கிணை-கண்டதில்லையென்றுகாதல்கொண்டார். (அஅ)

கண்ணேபொன்னேபெண்ணே வள்ளிவள்ளியென்று - கையின்மயிலைப்பிடித்துக்கொண்டு-காமன்கணை-யைந்தும்பட-சோபம்மிக - வேவந்திடக் - கந்தன்மயங்கித்தளர்ந்தானே (அகூ)

கட்டிப்பிடித்தென்னைச்சேராயோபெண்ணே- காமக்கவலையைத்தீராயோ-கமலத்திரு-நயனத்திலே-முசம்வைத்தொரு- சுகம்பெற்றிதழ்கனியைநீதந்தாலாகாதோ. (கூய)

பெண்கொடியேபசுந்தங்கமே நீசற்றேபேசினால்வாய்முத்தஞ்சிந்திடுமோ-பேதகத்தொடு - பாதகத்தினீ-தோதகத்தொழி லேயிருத்தவள்-பேசாமடந்தையோசொல்லுமென்றார். (௬௧)

கண்ணிமையெட்டாத வேந்தாமோபெண்ணே காமக்களஞ்சியமோவறிவேன்-கற்பகத்திடு-வெற்பதித்துனை-வைப்பதற்கொரு - வொப்பெடுத்தலர்-கன்னஞ்சுவேடர்கண்டாய்மயிலே. (௬௨)

வாலசன்னசியோபேசவொண்ணாதோ சொல்மௌனமோசுகமொத்தமாதரசே-வாசகத்தொரு-நேசகத்திலேவாசையின்குர- லோசையேபட-வாய்விட்டடங்காதமையல்கொண்டார். (௬௩)

சித்தமிரங்கியுருகாதோவுன்னைத்தேடியென்மோகம்பெருகாதோ, தேகத்திலே - மோகத்தமை-யோகப்பிர-பாகப்பட-செங்கைவளையக் குலுக்காயோ (௬௪)

வாய்திறந்தோர்மொழிசொல்லாயோவந்தமன்மத ராசனைவெல்லாயோ, மகுடத்தன-பாரத்திலே-சுகமுற்றனு-போகத்தொழில்- மாறுமற்றொண்டுபுரியேனோ. (௬௫)

கட்டிக்கலந்துசுகந்திரவுன்னைக் கட்டிப்பிடித்தேன்சுகமுடனே, காமக்கழு- மீறிச்சுக-தேகத்தொடு- பூமிக்குளே- கந்தன்மடலேயும்விட்டெழுந்தார். (௬௬)

வாலசுப்ரமண்யதேவருமிப்படி மயங்கிமெத்தைகயிலே சாய்ந்தார், மானார்சுக - மீனார்விழி - தேனாளிது - காணுமலே- மாதுதெய்வானையுமோடிவந்தாள். (௬௭)

அருகில்நின்றிடு நாரதனைக்கண்டு வல்லனைத்தெய்வானையு மென்னசொல்வாள், அதியிற்கப-டாவிந்தது-சாதியிற்றொழி-லோவுமக்கது,வருந்தவமுனிவர்க்கழகோ. (௬௮)

அன்னைதெய்வானையேசொல்லுவன்கேளம்மாவடியேன்மேலொரு தொஷமில்லை, ஆறும்படை- விடும்வினை-யாடும்குகை-நீருஞ்சுனை- யாடியேசுத்திவரும்வழியில். (௬௯)

வேள்விமலையெனுங்கானகத்திலங்கேவேடர்குழுக்குலவள்ளிதன்னை-சிரிவாகிய- பரிபூரணி-மதுபோலவே-சதிராயொரு, மின்னைக்கண்டேனென்றுசொன்னதல்லால். (௭௰)

மங்களமாய்க்குறமானைமணந்து நீமாலையிடுமென்றுபேதகமாய்,வடிவேல்விழி-மடமாதையு- மடியாருதமக்-கடியாளென-வாயினாற்சொல்லவுமில்லையம்மா. (௭௧)

உண்டவீட்டுக்கு கீரண்டகஞ்செய்தாயே ஒகெடுவாய்பாவிநாரதனே-யுள்ளாகிநீ-யில்லாமலோ- கள்ளாமொழி-விள்ளாதநீ- யுன்னிடசேதி தெரியாதோ. (௭௨)

இந்திரன்கண்ணே பசுங்கிளிபேசும்மாவென்மேற் சமுசயமென்னதே-யினிதாகிய-கனியாவரும்-தனதாகவே-மனமாகுவ,ரிஷ்டஞ்செய்வதுநீகண்டாயோ. (௭௩)

இதகனையுஞ்செய்துகத்திரிகட்டவனில்லையென்றே மொழிசொல்லவந்தாய்- இதைநீயொரு-கதைபோலவு-மதியோதலை,விதியோசொலுமென்றைக்குஞ்சந்தேகந்திராதே. (௱௪)

குண்டுணிநாரதனென்றெனையிங் தக்குவலயந்தன்னிலெடுத்துரைப்பார்-குறையாகிய- நெறிபேசிய-பரியாசமா- வெனையேசுவர்கொண்ட சின்னத்தினங்கூறுகண்டாய். (௱௫)

தொட்டிலையாட்டித்தொடையைநெருடியதோதகவித்தையைநானறிவேன்-சுபசோபன-மதுபேசிய-முகமாயமோ-விதுபாயமோ- சுந்தரவள்ளியைப்போலெழுதி. (௱௬)

சித்திரமடலையென்சுவாமிக்குநீதந்து மித்திரபேதங்கள்செய்யிலையோ-தெரியாதுள-மறியாததோ-பெரியோர்தவ-நெறிதானிதோ- சீக்கிரம்போமென்றெழுந்திருந்தாள். (௱௭)

சித்திரமெத்தையில்சித்திரை செய்கின்ற செந்திவேலாண்டியைத்தான்பார்த்து-தெய்வானையும்-வைபோகமு-மிதுவோவென- மனம்வாடியே-தெளிந்துவிண்ணப்பஞ்செய்யலுற்றாள். (௱௮)

கந்தரேநீரொரு கம்பத்திரண்டானைகட்டவென்றுவிந்தக் கோலங்கொண்டீர்-கருணாகர- மதுபோலவே-குறமானையு-மறவாமலே- காதல்கொண்டீரென்னபேதகமோ. (௱௯)

என்னிலும்பார்க்கவதிசயமோவந்தவேடிற்குறத்திமேலிச்சைகொண்டீர்-எங்கும்புகழ்-மாதேவிவ-ளெங்குங்கிடை- யாதோசொலு,மென்னசொல்லீயினியாவதென்னே. (௱௰)

அந்தப்புளிப்புமறிந்துபாருமென்னுசைக்குமரகுருபரனே - அயில்போல்விழி,மயிலானையும்-கைலாகுட-னுயிலாகவே- யன்புடனே -மணஞ்செய்யுமென்றாள். (௱௰௧)

சந்தோஷஞ்சந்தோஷமென்றெழுந்தார்கந்தர்தாகந்தெளிந்துமனங்குளிர்ந்தார்-தனதாகிய-மனையாளொரு-மனதாகவே சரணாகதி-தந்தேவிடைகொடுத்தேகுமென்றாள். (௱௰௨)

வள்ளியிருக்குந்தினைவனச்சோலைக்கு வழியெங்கேசொல்லும்நாரதனே-மறவாதொரு-குறமாதையு-முறவாகியே-வரவேணுநீ- வாவென்றட்டுங்காதமையல்கொண்டார். (௱௰௩)

வில்லுமம்புகொண்டு வேடராசன்போலே வெற்றிமகுடமும்புனைந்து- வேலாயுத- கோலாகல- சீலாவனு- கூலாவர - வேணுமென்றாரந்நாரதரும். (௱௰௪)

அப்படியேகந்தன்வேடுவர்கோலங்கொண் டாறு முகத்திலுமேனியுமாய், அருகேமுனி- பிறகேவர-குருவாகிய- துரைவேலவ-ரானந்தங்கொண்டுமுன்னேநடந்தார். (௱௰௫)

கந்தனும்நாரதனும்வழிகூடியே காடு செடியெல்லாந்தான்கடந்தார் கனிவாய்மொழி-யினிதாகவே-தினைதூவியே-வனமேதெனக்காரணமாகநடந்தாரோ. (௱௰௬)

பொன்மலைதான்மலைகடந்தார்தவம்பொங்கும்குற்றாலமலைகடந்தா
ர்- பொதிகாசல-மதிலேசிவ- கதியாய்ய- நதிசூழ்தவம்- புரியும்கோசிக
மாமுனிவன். (௱௧௭)
வேள்விடைக்குமலை யிதுவாயிங்கேமெத்தவுஞ் சித்தரனேகமுண்
டாம்- வெகுவாகிய-தவமேவிய்-நவமாகிய-குகைபாரென-விண்ணாட்டு
நாரதன்சொன்னதுவே. (௱௧௮)
கந்தன்திகைத்துமதிமயங்கியந்தகானகமெங்குந்திரிந்தலைந்து - க
ணபோனதயின்-மனதாங்கினேன்-றனதாகிய-வனவாசமே- கன்னித்தினைவ
னங்காணிர்களோ (௱௧௯)
போதனைக்குள்ளென்னையாளாக்கியெந்தன்புத்தியைப்பேதஞ்செ
ய்தாயே-பொய்யோவிது- மெய்யோவுன்றன்-லீலையோவினி- யையோ
விந்த-புலனிடத்தேவில்லைநாரதனே. (௱௨௰)
சித்தமயங்காதேயையாவே யுந்தன்சிந்தையில்வேறெண்ணம் வை
யாதே- தேனூர்மொழி-மானுளையும்- பூணுமலே- வீணுதுமோ-சீக்கிரம்
வாருமென்சாமியென்றார். (௱௨௧)
மந்திரவேள்விமலைக் கருகேயந்த வள்ளித்தினைவனந்தோற்றுதுபா
ர்-மலையாதேநீ-மெய்யாதுளந்-துலையேதினி- நிலைபாரிது,மான்மருகாக
திர்வேன்முருகர் (௱௨௨)
சோலையிளங்குயில்மாமயிலாள்வள்ளி யோலமென்றகுரல்பேசுகி
றாள்-தொனியோநவ- மணியோதிகழ்-பனிசேர்மொழி- பனிகாவிலே
சுந்தராகாதாரக்கேளுமென்றான். (௱௨௩)
காதாரக்கேட்டுமுன்னேநடந்தார் முனிகாலக்கெதிகொண்டு பின்
றடர்ந்தார், கருமாமுகில்- நிறமோகுழல் - குறமானையும்,பரண்மேலெ
திர்-கந்தன்தெரிசனைக்கண்டாரே. (௱௨௪)
கன்னலுக்குள்ளே நின்றகன்மணியோ வந்த காமாதியோகதிர்மதி
யோ - கனசோபித - மெனவேயிவள் - நினைமேவிய-வனமேவரும்-கார
ணமேதுசொல்வாய்முனியே. (௱௨௫)
கோதையெனுஞ்சுகமாதரசேயுன்மேற் காதல்கொண்டேனடிபாத
கியே, கொஞ்சங்குயின் - மிஞ்சுந்தொனி-நெஞ்சந்தனில்-வஞ்சந்தர,
கூவுதல்லோவிளஞ்சோலையிலே. (௱௨௬)
மாரன்விடுங்கணை பட்டுருகியெந்தன் மார்பைப் பிளக்குதடிமயி
லே,வாவென்றெனை-மேவுந்தொழிற்-காவுங்கன-தாவுண்டடி, மன்மதன்
போற்கூடமாட்டேனோ. (௱௨௭)
வந்தவிருந்துக்குபசரித்தன்னம் வழங்காதபேருண்டோவையகத்
தில், மானேகனி - தேனேயடி-நானேமய, லானேன்முழு,வஞ்சகநெஞ்
சம்படைத்தாயே. (௱௨௮)
சொன்னதெல்லாங்காதிற் கேழ்க்கிலையோ பெண்ணே என்னையுங்
கண்ணாலேபார்க்கிலையோ, சோபந்தர,மேனுங்கணை-தாபம்மற-நீவந்தெ
னை,சொந்தமாய்க்கவசஞ்செய்தாயே. (௱௨௯)

பேசினதாற்குலந்தாழ்வாமோவிளம் பேதையரையுந்தன்வாய்நே மோ, பெண்ணைப்படி-கண்ணைமனம்-புண்ணுகுது-சொன்னேனுந்தன் பேரென்னசற்றேகூறுமென்றார், (௱௩௰)

கந்தனுரைத்தமொழிகேட்டு வள்ளி காதிலிருகையை வைத்து நின் று, கருணாகர-வருணாஜல-வருவாய்துணை-குருநாதனேகாதிலுங்கேழ்க் கவிதிவசமோ. (௱௩௧)

ஆகட்டுமென்று மனந்துணிந்து வள்ளி மோகித்தகந்தனைத்தான் பார்த்து, அடமோமன - திடமோஅப - கடமோவென-திடம்நீவர,யார் சொன்னமதியிதுவேடுவனே. (௱௩௨)

வாய்திறந்தோர்மொழிநீர்சொன்ன தென்னிட்டமாதவந்தானடிகண மணிசிய,மாரன்கணை-மிருந்தன - பாரந்தனி-லேவந்துனை,மருவிமோக ந்தெளிபேனே. (௱௩௩)

மெத்தப்படித்தவன்போலேவந்தாய் பித்துப்பிடித்துதோவேடுவ னே, மேலுந்தலை - கீழுந்துறும்-கோலஞ்சக-சாலங்கதை, வீணாகநீகெ ட்டலையாதே. (௱௩௪)

எதுபஞ்சமாபாதகியே முன்னேவாதுசெய்யாதேபழிகாரி, யின் பம்வெகு- சம்பந்தர-நம்பும்முனை-யென்பங்கிலே, யென்றைக்கனுக்கிர கஞ்செய்வாயோ. (௱௩௫)

எட்டாததேனுக்கொருநொண்டியண்ணாந்து கொட்டாவியிட்ட க தைபோலே,எங்கிக்கணை - தாங்கிப்பினை-வாங்கியிக-வோங்கியே,என் முன்னேநில்லாதேபோவென்றாள். (௱௩௬)

இப்படிநீமுழு வஞ்சகமாயென்னை சர்ப்பனைசெய்வாயோ மாதர சே, யேழைக்கொரு-வாழைக்கனி- வேளைக்குத-வாதிப்படி,யின்னமும ர்ம்மம்விடாயோநீ. (௱௩௭)

அண்ணமாரம்பு கொண்டேவருவாருன்னைக் கொன்றுகுலையைப் பொருந்திடுவார்,அங்கந்துளை-பங்கம்பட- வெங்கும்பிர-சங்கந்தர, வற் றுவிழத்துண்டுசெய்திடுவார். (௱௩௮)

அற்றிருதுண்டாய் நான்பட்டாலும்வேட ரற்றுவிழகணைதொட் டாலும், ஆசைக்கொரு-நாளைத்தினம்-பேசிச்சுக - போகத்துட, னன்றி லும்பேடும்போற்கூடேனே. (௱௩௯)

சுத்திசுத்திவட்டம்போட்டுவனமெங்குங் கத்திநின்றேங்கிமெலியா தே, சொல்லச்சுனை - யில்லைப்படி - கள்ளத்தொழி -லுள்ளத்திலே,தோ ழியைவிட்டடிக்கச்சொல்வேன். (௱௪௰)

மங்கையர்கையிலகப்பட்டால் நான்றெய்வகங்கையிலாடும் பலன் பெற்றனனே, மயிலேகுற-மயிலேகரும்-குயிலேவிழி- துயிலேனடி, வந் தொருமுத்தந்தாராயோ. (௱௪௧)

எதுபரியாசமிஞ்சுகிறாய் பெண்கள்சேதிய றியமற் கொஞ்சுகிறா ய், இனிமேலுனை-முனிவென்பயஞ்-செனியாமலே-துணிவாகநீ,யென் னுகோலஞ்செய்யவந்தாயோ. (௱௪௨)

கோலமெல்லாங்காம, கோலமல்லால்வேறே- கோலமறண்டோவுன்
மேன்மாலானேன், கூவுங்குயின்- மாவுங்கணே, நாவுஞ்சுக- மேவுங்தொ
ழிற், கூடும்பருவமிதுவுனக்கே. (௱௪௩)

கொம்பிளவாற்பட்டமந்தி யைப்போல்நின்று - வெம்பித்திரிந்து
மெலியாதே, கண்டாய்மனக்- கொண்டாய்மயற்- றண்டாகுவாய்- செ-
ன்னேனன்னணன், காணுமலோடுவாய்வேடுவனே. (௱௪௪)

பஞ்சையைப்போல்நின்று கொஞ்சுவனேவடி - வஞ்சியுன்மேல்,
விழிக்கஞ்சுவனே- பழியாகிய- மொழிபேசுறு- யடியேன்மனக் - தெளி
யாதடி, பாவியுன்சித்தமிரங்கிலேயோ. (௱௪௫)

ஆர்குடிதன்னைக்கெடுக்க வென்றேவிவனுண்டி வேஷங்கொண்டு
வந்தாண்டி, அவதூரிது, புவிமீதிலே- சீவனர்கைய, லதுபாரடி ,யன்ன
மேயென்னுயிர்ப்பாங்கியரே. (௱௪௬)

பாங்கியருமந்தவேடனைப்பார்த்து- பதைத்து நின்றேமொழிசொ
ல்லலுற்றாள், பழிகாரனே - தெளிவாகநீ - மொழியாதேபோ- வழிகூடி
யே, பரங்குருகுலேந்திடநாளாச்சோ. (௱௪௭)

இங்கிதமென்மொழிப் பாங்கியரோநீங்க- ளென்க்கும் வள்ளிக்கு
ம்பொதுவாமே, என்றுந்தன-தென்றுந்துணை-யென்றும்முநவெனீறும்
மினி-யென்னைக்குங்கிர்க்கயுண்டாகுமென்றார் (௱௪௮)

வங்கணமுள்ளவன்போல்வந்துபெண்களை- வாகிட்டு எய்க்கவெ
ன்றிங்குவந்தாய், மதமோவென்ன- விதமோவிது- சதமோதுரா, கிரு
தமோவிது- மார்க்கமல்லவென்றே வெடுவனே. (௱௪௯)

நம்பினபேரைநடுங்கச்செய்தால்நம்பன், நன்றென்றுமக்குத்துணை
செய்வனே, நாடுஞ்செயல்- கூடுஞ்சிறு- பேடுந்ரா - சோடுந்தர- நன்
றுகநான்மணஞ் செய்வேனென்றார். (௱௫௰)

கந்தனும்வள்ளியும் பந்தியமாய்நின்று, கைசார மிஞ்சும்வேளையி
லே, கதருங்குட- லுதருங்குலே-யுதரும்மொழி- சிதறும்படி, காணக்கு
றவர்கள்வந்தாரே, (௱௫௧)

கானகந்தன்னிலேவேடர்வரவுமெய்ஞ்-ஞானகுமரகுருபரனுங்- க
ண்டஞ்சிய-நின்றுஞ்செய-லொன்றும்புகழ்குன்றந்தனித்- காரணமாய்
கைகாட்டவென்று. (௱௫௨)

பூவுங்கழையுங்குலுங்கியபிஞ்சுங்காய்-சோபிதமாகவள்ர்ந்தோங்கி,
பொங்குமவன- மெங்கும்மிரு- டங்கும்நிழ, லெங்குந்தர- பூசித்துவேங்
கைமரமானார். (௱௫௩)

வரதெல்லாம்போயிமு ளைத்திடும்வேங்கைமரத்தையுங் கண்டுமதி
மயங்கி, மலைவேடர்கள், சிலர்கூடியே-பலயோசனை-செய்தேயிது- வஞ்
சனையென்றுநினை நதுசொல்வார். (௱௫௪)

என்றுமில்லாவிந்தவேங்கை- மரமிங்கேயின்றைக்குவந்து,முளைத்
ததென்ன- வேதோவிது - சூதோவென்ன - திட்டாதெரி-யாதேயென-
வேக்கிழைவள்ளியைக்,கேட்கலுற்றார். (௱௫௫)

தங்கையெனும்வள்ளி நாயகியேயம்மா - வெங்கள்குலக்கொழுந்
தேகேளாய், சதிராகவுன், னெதிரேயொரு- விதிகாரண- மிதுவேதென
தயவாகவே வள்ளியேசாற்றுமென்றார். (௱௫௬)

வின்னுகிறேனினியண்ண- மாரேயந் வேங்கை முளைத்ததையா
னறியேன்- வினையாகவே- தினை தூவிய-வனமீதிலே-சனிபோலவே- வீ
ம்புக்குவந்து முளைத்துதென்றாள். (௱௫௭)

பைந்தொடிவள்ளி யுரைத்ததைக்கண்டிது- கந்தன்செயலென்று
வேடுவரும்- பாஷைக்குர- லோசைப்பட-நேசத்துடன்-பேசிக்கன-பா
லேவனத்தி னதிசயமோ. (௱௫௮)

தங்கைக்குவேங்கை மரந்துணையாய்நல்ல- தாவளமாம்வெகுசோ
பிதமாங்- தங்கும்புனல்-பொங்கும்வன- மெங்குங்நிழல்-தங்கும்படி- ச
ண்முக நாதன்றுணையிருப்பான். (௱௫௯)

ஏதுக்குமஞ்சாதே மாதரசேநாங்கள்- சோதிக்கதிர்கொய்யவே வ
ருவோ, மென்றுந்திகழ்- கண்டுங்கன-குன்றம்பதி- சென்றுஞ்சில-வே
னற்குறவர்கள் போனபின்பு (௱௬௰)

வேங்கையாய்நின்ற வுருமாறியந்த-காங்கேயன்வேடர்வடிவாகி-வி
ரகத்தமை- பெருகிச்சுகம் - சரசத்தொடு-மருவிக்குற - மெல்லியர்தம்
மிட மேதுசொல்வார். (௱௬௧)

உன்னைமறக்கப்படவில்லையே யெந்தன்- கண்ணுக்குறக்கம் வரவி
ல்லையே, யுனதாசையின்-மனதாகவே- நினைவாகுது - தனதாக்நீ- யுற்ற
துணையென்று நம்பிவந்தேன். (௱௬௨)

ஆசைகொண்டபேர்க்கு ரோஷமில்லையென்று, பேசவந்தாயிது
வேடுவனே, அடமாகிய-மடவார்களி-னிட்மேவரு-கட்னேதினி-யாசார
ங்கெட்டவ னீயல்லவோ. (௱௬௩)

ஆசாரமுங்கள்ளவாசாரமே பெண்க-ளாசரமெல்லா மறியேனோ-
வடிபாதகி-கொடிதாகநீ- துடியாய்மனம்- படையாதேபோ- வன்னமே
தேனே பெண்மயிலே. (௱௬௪)

வம்புக்குச்சண்டை வளர்ப்பதிலேயெங்கள், கும்புக்குறக்குலம்
வேடுவனே, வாறும்பல-சூதுங்கன-தீதும்பலி - யாதெங்களை- மாருட்
டஞ் செய்யமுடியாதே. (௱௬௫)

வம்பிலேம்பாவி நாரதன்வார்த்தையை, நம்பிவந்தேன்மதிகெட்
டலைந்து- மதனன்கணை- யதுவெந்தனை-நிதமுந்தவ்-சிவசிந்தனை-மதியு
ம் பேதகமானதுவே. (௱௬௬)

கண்மணிபாவையை பெட்டியெட்டிச்சும்மா, கையிற்பிடித்தாலக
ப்படுமோ, காடுந்திட-மேடுஞ்சிலே, யோடுங்குயில்-பாடுந்தொனி-காம
ரசத்தை விளைத்ததென்றார். (௱௬௭)

அந்தக்ஷணத்திற் குறவருமன்புடன்-வந்ததைக்கண்டு,கபடமாய்
அருள்வேலவ- னொருமாதவ- னுருவாகியே- குறவோர்கண்மு - னங்க
ம்வெடு வெடுத்தாடிநின்றார். (௱௬௮)

தொண்ணூறுஞ்சென்ற கிழவனைப்போலுடல் தொங்கியேகண்க
ளும்பஞ்சடைந்து, சுழல்வாய்மொழி, குடர்வாகியே, தளவாயமுதிர்,
பழமாகவே தோன்றியேகாஷாயம்பூண்டுநின்றார் (௱௬௯)

கொட்டியபஞ்சைப் போனரைத்துப்பல்லுங்கிட்டியேவாய்நீர்வழி
ந்தொழுக, கோலஞ்சக,சாலம்வணி, தாழும்வெகு,காலந்தனை, கொண்
டுகடந்தபெரியவர்போல் (௱௭௰)

செம்புலித்தோலும்விபூதிபஞ்சாட்சரந் தெண்டுகமண்டலங்கை
ப்பிடித்து.சிவனையருள்-பவனையிரு-பவனை துணை-யினியென்று,தெ
ளிந்தயோகியைப்போலநின்றார். (௱௭௧)

கானகந்தன்னிற தபோதனர்வந்ததுங் காரணந்தானென்று பூரண
மாய், கனவேடர்க-ளனைவோர்களுந்.தனதாயொரு-மனதாகவே, கழலி
னைப்போற்றிப்பணிந்துசொல்வார், (௱௭௨)

ஐயாவேபஞ்சாட்சரசுவாமிநீயெங்களையாண்டகுலதெய்வம்போலவு
மே,யடிமேலடி-தடுமாறியே- கொடிதாகிய- கடுகானிலே, அங்கம்பொ
றுத்துதோவெங்கேவந்தீர். (௱௭௩)

வேங்கையுங்காட்டு மிருகங்களுக்கெல்லாம் பாங்குடன்தப்பிப்பி
ழைத்துவந்தீர்,விதிகாரண-மதுபார்வளர் -பதிகானது- வெதுவோசொ
ல, வேணுமென்றாரந்தவேடரெல்லாம். (௱௭௪)

சொல்லுவேன்கேளுங்களையமாரே வெகுதூரம்வடகயிலாசம்விட்
டு, துங்காமதி-கங்காசல-மங்காம-லுகந்தாடியே,தொல்லுலகெங்குஞ்சு
ற்றிவந்தேன். (௱௭௫)

தெண்டிரைசூழுங்கதித்தருணாசல சீர்காழிபொன்னுஞ்சிதம்பரத்தி
ல்,சித்தம்பெற-வைத்தும்பலன்முச் தும்பரி-கத்தந்தர,தேடினேனொரு
பலன்கிட்டாமல் (௱௭௬)

கண்டிகதிர்காமங் கோசலதேசங் காசியிலும்மதுவாசியென, கண்
டும்பல-னுண்டுஞ்செயல் கொண்டும்புக-ழொன்றுந்தரும்- கன்னியாகு
மரியாடவந்தேன். (௱௭௭)

சத்தமுஞ்சித்தமும்வேறுபட்டுத்தலைசுத்தியே புத்தியுங் கூறுகெ
ட்டு, தள்ளுங்குலை-துள்ளுந்துய-ருள்ளுந்துணை-கொள்ளும்வெகு- தா
பந்தமாகியவேளையப்பா. (௱௭௮)

உங்கள்தஞ்சமென் றேகம்பிவந்தேனையாநங்கைக்குறகுல வேடு
வரே, யுலையர்மன-மலையாதொரு - நிலையாவிட-மூலையோவெனக்,குன்
மைசொல்வீரெங்களையமாரே. (௱௭௯)

அப்படியேயுங்கள் சொற்படிகேட்கிறோமென்புள்ள தங்கையொ
ருத்தியுண்டு, ஆடுங்கயல்-கூடும்விழி-நீடுந்தினை- காடும்புன, மதோயிரு
க்குதுவாருமென்றார், (௱௮௰)

மெள்ளமெள்ளக்கைப்பிடித்துப் பண்டாரத்தைவேடிக்கை யாக நடத்திக்கொண்டு, வேலன்செய-லாலேயனு-கூலம்பெறு,வாயென்றவர் மெல்லியர்க்கெதுணையாகவைத்தார். (௱௮௧)

தங்கமேபெண்குயிலே மயிலேவள்ளித்தாயேநம்குல சாமியைப் போல்,தாபந்தம-தாய்வந்தவர், சோபங்கன-பாவம்மிது - தஞ்சமென் றோர்களைத்தள்ளுவாரோ. (௱௮௨)

ஆனாலுமிந்தப்பரதேசியோமெத்தவநிதியைப்போலவுங் காணுதம்மா, வன்பாயிவர்-தன்பால்நீமிக-வடிமைத்தொழில்-புரிவாயுனக்-கனந்தஞ்சுகமிதுதானென்றார். (௱௮௩)

நல்லதினைகொய்துபோம்பொழு துங்களை நாங்களுங்கூட்டியே செல்வமென்று,நன்றாய்மன-மொன்றாகவே-சென்றார்பதி - கண்டார்குற, நம்பியும்வேடரனைவோரும். (௱௮௪)

தந்தையண்ணன்சொல்லைத்தட்டாமல்வள்ளி சிந்தைதெளிந்து மனங்குளிர்ந்து, தாகத்தொடு-மோகித்திடு-யோகப்பர-தேசிக்கிவள், சரணமென்றேயிருகைகுவித்தாள். (௱௮௫)

ஆண்டவனேபண்டாரமேபோற்றியென் னையனேயெங்கிருந் தெங்குவத்தீர், ஆடும்பர-வேடும்புனை- நீடும்புன-லாடுஞ்செய-லங்கந்தளர்ந்திடுங்காலத்திலே, (௱௮௬)

மாதவரோசிவசங்கமரோயையா வேதமெய்ஞ்ஞான தபோதனரோ, வாருய்பர, ணேறுங்களை-தீருந்தகை-யாறுந்தினை-மாப்பலகாரங்கொடுத்திடுவேன். (௱௫௭)

காத்தபொருளைக்களைபோகக்காரடிபேத்திநா னேழைப்பண்டாரமல்லோ, கண்டுந்துணை-கொண்டுஞ்சுக - மென்றும்பல,னுண்டாம்படி காப்பற்றவேணுங்கடனுனக்கே. (௱௮௮)

நல்லதுபண்டாரசாமிசற்றேபொறு உள்ளது போலேபசிக்கமுது நாவும்முணர்-வாகத்தினை-மாவும்மிகு - தேனும்பழ, நான்கொண்டுவாரோனென்றெழுந்து. (௱௮௯)

செந்தினைமாவையிடித்துப்பொடைத்துத்தெள்ளியே தேனைவிட்டுப்பிசைந்து,தேறுங்கனி-மீறுஞ்சுவை-யாறுங்களி-கூறும்படி, சித்திரமாய்ப்பலகாரஞ்செய்து. (௱௯௰)

தேக்கிலைகொண்டதைத் தொன்னைதைத்து அதில் தேனுந்தினை மாவைமுன்னேவைத்து, சிறியாளுமை, யறியாதவள்,தருபோசனம்,பரிபூரண, தேவாவுண்டுபசியாறி. (௱௯௧)

மாப்பலகாரமிந் தாருமையாசும்மா சாப்பிடுஞ்சுவாமியென் றேகொடுத்தாள், வாசப்பல-காரத்தையு-மாசைப்பட-னேசித்தவர், வஞ்சகமாய்த்தினைமாவையுண்டார். (௱௯௨)

உண்டந்தமாவைநன்றாகவிழுங்க வேயுருண்டுசுருண்டுகண்ணீர்ததும்பி,யோடிக்களை- மூடித்துடல்-வாடிக்குட - லாடிப்பர, துள்ளுடைந்தங்கந்தள்ளாடையிலே. (௱௯௩)

கண்டந்தவள்ளிதிடீரென்றெழுந்து தன்கால்பதறிக்கிட்ட வோடி வந்து,கைலாகுடன் - மயில்வேலனை- குயிலாள்குற மாதுங்கனே,காதினிற்சுக்கைவைத்தூதிநின்றாள். (௱௯௪)

பெண்ணேயென்றாரோடி முன்னேவந்தாளடி பேத்தியென்றார்வள்ளிபோற்றியென்றாள், பேதைத்தின-மானவக்கண-மாகத்தர, நீவைத்தது, பேதகமென்றுதெரிந்திலனே. (௱௯௫)

மாவென்றுசொல்லியே நஞ்சைத்தந்தாய்பாவி தாவென்றுசொல்லியேவாங்கியுண்டேன்-மதியோயிது- சதியோயென்ன- கெதியோதலைவிதியோயினி,வாதென்னவென்னுயிர்போருதென்றார். (௱௯௬)

தொண்டையைச்சுத்திப்பிடிக்குதடியுயிர் கண்டத்தில்நின்று துடிக்குதடி,சூதுங்கல-திதுஞ்செய-லேதும்தெரி-யாதெந்தனே,தோதகஞ்செய்யத்துணிந்தாயே. (௱௯௭)

எட்டிக்கனியோசெங்கொட்டையோபாஷாணங் கட்டியெனக்கென்றேநேசவைத்தாய்,ஏழைப்பர-தேசிக்கிது-வேளைப்பல,னோபெற்றது, விப்படியுஞ்சதிசெய்வாயோ. (௱௯௮)

கன்னியாகுமரியாடவந்த பலன்கைமேறபலித்ததே சண்டாளி, காதுக்குளே,சிலக்கனே-சூதுற்றுளம்-பேதிக்குது, கன்னியே,தண்ணீர் வேணுமென்றார். (௱௯௯)

தண்ணீயென்றுள்ளந்தயங்கியபண்டார சாமியிதென்னகோலமையா, தலைநாள்விதி - பலனோகெதி-குலைபாதக-மலவோயிது,சம்புசதாசிவன்சோதனையே. (௨௱)

கொம்புத்தேன்விட்டுப் பிசைந்தபலகாரங் கொண்டு துண்ணக்கொடுத்தபலன்,கோலஞ்செக-சாலங்கலி-காலம்மிது - வேலன்செயல், கூற்றுவன்போல்வந்திராண்டனே. (௨௱௧)

நன்மையேநான்செய்யத்தின்மை யென்றீரையாநல்லதுக் கேயிது காலமல்ல, நானும்பல, காரங்கனி, தேனுந்தினே, மாவுந்தா- நஞ்சென்றுசொன்னீரோவஞ்சகமாய், (௨௱௨)

தங்கையண்ணமார்களெந்தனுக்கேயின்னே சகுனிபோலவே கொண்டுவந்தார், தாவுங்கனி, தாவுங்குயிற், கூவும்புன,மேவுஞ்சுனை,தண்ணீருஞ்சாப்பிடும்போற்றியென்றாள். (௨௱௩)

இந்தச்சுனைநீரருந்தவென்றாலது சந்தேகந்தோணுது வேண்டாம்போ,வென்பால்மன- தன்பாலிரு-கண்பாரடி,பெண்பாவையே,யென்பழியையிங்கேகாணுமென்றார். (௨௱௪)

வம்புகள்கொண்ட பண்டாரமேயேனின்னம் வாயில்வந்ததெல்லாம்பேசுகிறீர்,மாதென்விதி-சூதென்பது-ஏதுந்தெரி-யாதெங்கினி,வாருமிந்தச்சுனைபாருமென்றாள். (௨௱௫)

கள்ளமில்லையிதுநல்ல தண்ணீரையா மெள்ளவிரங்கிப்புசியுமென்றாள், கனமாகிய-வனமீதிலே-தனதாகிய- சுனையிதென, கன்னியுமெள்ளவிறக்கிவிட்டாள். (௨௱௬)

தாகமுடன்சுனைநீரையள்ளிமிகப் பாகமுடனுண்ணும் வேளையி
லே,தம்மாறுதென்-னடிசோறுது-விடுமோபழி- யடிபாதகி-சற்றேபொ
று,கையைநீட்டுமென்றார். (௨௱௭)

ஆதாரமாய்த்தண்ணீர் கேட்டதற்கோ வென்னைப் பாதாளந்தன்
னிலேதள்ளிவிட்டாய், அரனார்செயல்- தருவாரடி- குறமாதுனே- மற
வேனினி, யாபத்துக்குப்பாபமில்லையென்றார். (௨௱௮)

கையைப்பிடித்தென்னைத் தூக்கடிபாவிநான் பையப்பைய வெளி
யேறுகிறேன், கடிதேதுயர்-கொடிதேவெயில்- சுடுதேவுயிர், விடுதேயி
னி ,காலமெங்கேயிதுசொலென்றார். (௨௱௯)

ஆருமற்றபர தேசியேயுன்கையைத் தாருமென்றே வள்ளிக்கை
கொடுத்து,ஐயாவொரு-கையாதர-வையாயிது-மெய்யாதுனை, யாண்ட
வரோவாருமென்றிழுத்தாள். (௨௱௰)

சந்தோஷம்வள்ளிகைதந்ததேலட்சம் பொன்தானென்றுபண்டா
ரமானந்தமாய்,தாகக்களை-போகத்தொடு-மோகக்கனி-வேயுற்றவர்-சம்
பிரமதாய்வெளியேறிவந்தார். (௨௱௰௧)

கோகநகக்குறமானேயிருவருங்கூடினத்தாலொருகுற்றமுண்டோ.
கோலத்திரு-மேனிக்குயி-லீலைத்தொழி-லேகற்றவள்- கூசாமல்தந்தெ
ன்னைச்,சேராயோ. (௨௱௰௨)

பண்டாரமேயுன்னைக்காத்தபலனெனக்குப்பலித்ததேயிப்போது
கைமேலே,பாபந்தன-சோபம்வெகு-தாபந்தம-தாய்வந்தெனைப், பா
சாங்குசெய்தாயோபாதகனே. (௨௱௰௩)

புண்ணியமென்றுநாக்கிழவாநல்ல தண்ணீர்கொடுத்தும்வினை
ச்சே, பொல்லாதவன்.நில்லாதேபோ- சொல்லாமொழி-கல்லாதேநீ,பு
த்திகெட்டவாண்டி தூரநில்லு. (௨௱௰௪)

பிச்சைக்குவந்தவன்பெண்டுக்குமாப்பிள்ளை யிச்சைகொண்டால
துமிச்சமுண்டோ.பேதைத்தன-மாயித்தனை-சூதுங்கற்,றுயோகிழவா
போடிசமென்றுநடந்தாளே. (௨௱௰௫)

அந்தமொழியையறிந்துசிவகிரிகந்தனுஞ் சிந்தையெல்லாமயங்கி
அருமைக்குற, மகளைத்தன-முரிமைப்பட-மனமுற்றவ-ரானைமுகனைத்
தியானஞ்செய்தார். (௨௱௰௬)

மந்திரத்தியானமாய்க்கந்த னுரைத்ததைத் தந்திமுகவ னறிந்து
கொண்டு,மலைமுடியே-சிலையோடவும்- பிலமாகிய-குலயானையாய்,வள்
ளிக்குமுன்வந்துதோற்றியதே. (௨௱௰௭)

கார்நிறங்கொண்டவடிவாகத்தந்திவீர்கொண்டு வள்ளிக்கெதிர்வர
வே,கண்டஞ்சியே-நின்றங்கனே- மண்டுஞ்செடி- யொன்றுந்துணை,கா
ணுமலேவள்ளியோடிவந்தாள். (௨௱௰௮)

ஐயாவேபண்டாரசுவாமி-நமஸ்கார மானைமிரட்டுதேகானகத்தில்
அன்பாகவே,நம்புமுனை-யென்பால்வரு-வாயிப்போதே-யையாவடை
க்கலங்காருமென்றாள். (௨௱௰௯)

என்னடிபாதகிநீயென்னைக்கொல்லவேமுன்னமே மாவென்றுநஞ்
சைத்தந்தாய். எந்தன்விதி-முந்துங்கெதி- தந்துஞ்சதி - கந்தன்செயல்
யென்னமோதப்பிப்பிழைத்துவந்தேன். (உஉக)

தாகத்துக்குத்தண்ணீர்வேணுமென்றேனுயிர் போகக்கிணற்றிலே
தள்ளிவிட்டாய்,தத்தித்தலை-சுற்றிச்செயல்- முத்திப்படி-தோத்திப்பர.
தாபரதொடுகான்வெளியேவந்தேன். (உஉக)

மூன்றுவதானையைக்கொண்டு வந்தாயையம் பூண்டாவியங்கந்து
டிக்குதடி,மோசப்படு-நேசம்விசு-வாசம்வெகு-தோஷம்முனை, முக்கா
லும்நம்பப்படாதுகண்டாய். (உஉஉ)

என்னைவிலக்கிவிடுஞ்சுவாமி நீங்கள்சொன்ன படியெல்லாம்நான்
கேழ்ப்பேன்,இச்சைப்பட்ட-விச்சித்திர-மெச்சிக்கன-பட்சத்தொடு-வெ
ன்றைக்குஞ்சொந்தபெண்ணுவேனென்றாள். (உஉ௩)

பெண்களைநம்பியேபங்கமழிந்தவர்கங்குகளை யுண்டோமங்கைய
ரே,பெருங்குண-மாறும்மிகழ்-வாகும்மவ-தூறும்வரும், பேச்சுறுதிக்
கொருசாட்சியுண்டோ. (உஉச)

சொந்தமனையாட்டியென்றுநீகைதந்து சிவன்பேரிலானையிட்டே
கொடுத்தால்,சோனைத்தட-மானைப்பயம்-நானிப்படி-மேனத்தொடு,தூ
ரத்தள்ளியுனைக்காப்பேனென்றார். (உஉ௫)

சொற்படியானையிட்டுக்கொடுத்தாள்வள்ளிகைப்பிடிநாயகன்நீயே
யென்றாள், துட்ரும்பழி-யடரும்வினை-படருங்கரி-கடரும்படி, சொல்
லாமலர்னையும்போனதுவே. (உஉ௬)

சேவலும்பன்னிருதோளுங்கடம்பணிசென்னியோராருஞ்சிவகு
ருமான்-செம்பொற்றன-மைம்பொற்குற-மய்கைக்கெதிர்-சம்பத்தொடு
சிங்காரவேலன்மயில்சேர்வைதந்தார் (உஉ௭)

கண்ணாரக்கண்டவள்ளியுந்தானென்னகாரணமோபரிபூரணமாங்
கந்தன்மலர், விந்தத்தனில்-வந்தும்பணி-தந்துந்திரு, காட்சிபெற்றுள்
ளங்கனிந்துசொல்வாள். (உஉ௮)

சாமியால் செய்தபிழைபொறுத்தென்னையுந் தற்காக்கவேணும் ந
மஸ்காரம்-தஞ்சம்புகழ்-நெஞ்சங்கன-வஞ்சம்பிர- பஞ்சந்தனில, தள்
ளாமலென்னையாட்கொள்ளுமென்றாள். (உ.உ௯)

அற்புதமாகியகண்மணியேயினிச் செப்புவேன்நான்வந்தகாரணத்
தை-மலையிற்றனி-ரிலையிற்றுயில்-நிலையிற்பல- கலைகற்றிடு-மாரியென்மா
மன்மகளல்லவோ (உ௩௰)

முன்னொருசாபத்தால்விபுதைமாதுன்னைப்பெண்ணென்றுபெற்று
வளர்த்தாளே-மறைதங்கிய-குறமங்கையர்-நிலையம்பதி-வரவுந்தலை,மு
னிவனுலொருமான்வயிற்றில். (உ௩க)

பின்புசநநங்கொண்டாய்மயிலே யதின்முன்பு சரவணப்பொய்கை
யிலே, பேசுங்கனி-யேசம்பிர-வாசம்பிர-காசந்தர, பெண்ணேதருவை
தாரஞ்சேய்தேன். (உ௩உ)

வந்துனைச்சேரவென்றேயயன்கற்பனையந்தக்காரணமிதுவல்லவோ மாதேயடி-கோதேமலை - யாதேபுவி - மீதேயினி, மன்மதனுமரதி போலவுமே, (௨௩௩)

என்றைக்குஞ்சோடிபிரியாமற்சுகங் கொண்டுகொககோகமுறைப் படியே, யிருபேரொரு-மனதாகவே-குருவுஞ்சிட-னதுபோலவு, மேக சையோகமாய்வாழ்ந்திருப்போம். (௨௩௪)

மூத்தகுடியொருபெண் ணுண்டவளிலும் நேத்தியாஉன்னைக்கண் பார்த்திடுவென், மோகம்வெகு.தாகம்நள- பாகஞ்சுக- போகத்தொடு மொய்குழல்வள்ளியைக்கைகலந்தார். (௨௩௫)

வாலசரவணவேலனும்வள்ளியும் லீலையனேகவிதம்விதமாய் - மா னுஞ்செயல், தானும்புனல்-கானந்தனில் வேடிக்கைபாய் - மன்மதகே ளிக்கைசெய்தாரே. (௨௩௬)

ஒட்டுப்பறவைகள்போலவுங்கூடியே விட்டுப்பிரியாத வங்கணமா ய். உரிதாய்வெகு-பரியாசமே-பெரிதாகிட-வரியோன்மக,ளொன்றைவி ட்டொனறைப்பிரியாமல். (௨௩௭)

நஞ்சுண்டகெண்டையைப் போல்மயங்கிபங்கே கொஞ்சுங்கிளி மொழிவஞ்சியுந்தான்-நாடுஞ்செயல்-கூடுங்குயில்-பேடுஞ்சரி- சோடுந் தர,நானுன்னைவிட்டுப்பிரியேனென்றாள். (௨௩௮)

திராதமையல்கொண்டேயிருபேர்களும் மாறுதமோகக்கடல்குளி த்து, சித்தம்பத-சுத்தம்பெற-வெத்துங்கனி-முத்தந்தர- தென்றலுலா வியகானகத்தில் (௨௩௯)

சோபந்தெளிந்தந்தக்கந்தனும்வள்ளியுந் தாபந்தணிந்து வெளி யேறி, திறவாகிய-குறமானையும்-விரைவாகவே-பரண் மீதிலே தோழியர் தம்மிடஞ்செல்லுமென்றார். (௨௪௰)

வந்ததடத்தின் வழியேகுறக்குலப் பைந்தொடி சென்றனள்கா னகத்தில்-மனவேகம தெனவேகிய-கனமாகிய-தினை சூழ்புனம்-வந்துக ண்டாள்வள்ளிபாங்கியரும். (௨௪௧)

கூந்தலுலர்ந்துகுலைந்ததென்னமுகஞ் சேர்ந்திருகண்கள் சிவந்த தென்ன-கோலம்பயில்-சாலம்மனு-கூலந்தரு,மாலிங்கித-கொங்கையெ ல்லாம்வடுகண்டதென்ன (௨௪௨)

தண்ணீர்ச்சுனையில் நடந்திடுங்காரணம் பெண்ணேவள்ளித்தாயே சொல்லுமென்று,தயவாயுரை-பயமோகுற-மயிலேயிது- பயிலோகதை சந்தேகமென்றார்கள்பாங்கியர்கள். (௨௪௩)

சொல்லுவேன்கேளடியன்னமேகண்மணி தோகையேயென்னுயிர் ப்பாங்கியரே,சுனையுந்தகை-புனையுங்கிழவனையும்பழ-வினையின்படிசோ பத்தைமாற்றித்தண்ணீர்கொடுத்தேன். (௨௪௪)

தண்ணீர்கொடுக்கின்றவேளையிலேவெகு உன்னிதமாயந்த கானக த்தில்,சத்தந்தொனித்-தித்துஞ்சிலை- சித்தம்பய-முற்றங்நனே-தந்தியு ம்வால்விட்டலறிடவே, (௨௪௫)

கிந்தைகலங்கிப்பபங்தேனடியம்மா பைங்தொடியேநாம்வரும்வழியில், செடியும்வெயிற்-பொடியும்பல-கொடியும்மெழி- லழியும்படி-தேகமெல்லாமுட்கிழித்துதென்ருள். (௨௪௬)

அப்படியே வள்ளியம்மையுஞ்சொன்னசொ லொப்பிதமில்லாமல் தோழியர்கள், அதிமோகன-ரதியேயொரு- விதமாய்முக-மதிசோருவ-தேதேதுசொல்லென்ருர்பாங்கியர்கள். (௨௪௭)

பாங்கிகளிப்படிகேட்டிடவேவள்ளி யேங்கிநின்ருளந்த வேளையிலே, பருவத்துட-னேவேடுவ. சுருபத்துட-னேவந்துமே-பராணுக்கெதிர்நின்றேதுசொல்வார். (௨௪௮)

நானெய்தமானிந்தக்கானகந்தன்னிலே தான்வந்துதேபதைக் காணீர்களா, நவரத்தின-வொளியுற்றிடுஞ்-சுவைபெற்றதோர்-மொழிகற்றிடும, நாரீகமுள்ளதோகையமே. (௨௪௯)

என்றுதான் வேடுவராசனுங்கேழ்க்கவே றுநன்றெனறு தான் பாங்கியர்கள், எங்களைச்சிறு-பெண்களென்றுநீ ரங்கிதத்துட, னிங் வந்துதா, னென்னமொழிசொன்னீர்வேடுவனே. (௨௫௦)

மாந்தளிரால்மானெய்வதுண்டோசும்மா யென்தான்பொய்சொலகிருய்நீயெய்திடும-மானுக்கிரு-கால்ரெண்டுகை-மேனத்தொடு, காதோலையும், வர்னச்சேலைமாலைதானுண்டோசொல். (௨௫௧)

சொல்லென்றுவேடுவ ராசனைக்கேழ்க்கவே நல்லதென்று சும்மா தானிருந்தார், சுரதத்தொழி-லேமிஞ்சிய-சரசக்குயிலே, யுள்ளதைசொல்லென்றுவள்ளியைக்கேட்டாரே. (௨௫௨)

எதடிபாங்கிகாள்நான்சொல்லும் வார்த்தையைச் சூதென்று, சொன்னீரநீதமதாய், எனைநீங்களுந்- தனதாகவே-மனஞ்சோதிப்ப-தெனகாரண, மேதுமறியேனெனவுரைத்தாள். (௨௫௩)

உள்ளத்தைச் சொல்லென்ரு லெங்களுடன்மொழி கள்ளமாய்ச்சொல்வதுஞாயமல்ல, வொளியாமலே-தெளிவாகநீ - மொழிவாய்முகஞ், சுழியாமலே, உண்மையைச்சொல்லென்ருர் தண்மையுடன் (௨௫௪)

தண்மையாய்ப் பாங்கிகளுண்மையைச் சொல்லென நன்மையுடன்வள்ளிநாயகியும், தனதாகிய-சகிமார்களே-யினவென்ருரு-மனதாகவே, தன்கதைவிள்ளமனந் துணிந்தாள். (௨௫௫)

விள்ளுவன்கேளென்னுயிர்த்துணையாகிய மெலலியெனுஞ்சகிமார்களே-வி‍தகாரண-மதிஞலே ..ய-வதிவேகமா-யொருவேடுவ, வேஷங்கொண்டென்முன்னேவந்ததுவும். (௨௫௬)

வந்தவரென்னுடன்சொந்தமாய்வார்த்தைகள் விந்தையுடன்பேசிநின்றதுவும்-வனமேவிய-வெனதன்னைர்கள்-சினமாய்வர, நினைமேவி.., ..னத்தில்வேங்கைமரமானதுவும். (௨௫௭)

..வங்கைமரத்தையுங்கண்டண்ணமாரெல்லோரும் வேலன்செயலலை ..ஞலும்பின்னர்- வேறுருபமாய்-நாடிவந்தெனைக் - கூடிடாயென, ..யே-வேடுவராசனும்நிற்கையிலே. (௨௫௮)

அப்போதுமன்னர்வருவதறிந்துதான்தப்பாதுநூறுவயது சென்ற அரிதாகிய,பெரியோரென-பொறியைம்புலன்-பிரிவாகிய,வாதிசிவனைப் போல்நின்றதுவும். (௨௫௯)

நின்றவரைக்கண்டுவண்ணமார்கூட்டியேநன்றாகயிவ்விடஞ் சேர்த்ததுவும்,நினைவாகிய-தினைமாவையுந்தனைவாங்கியே-மனதாகவே- நேர்மையா யுண்டபின்தாகமென்றார். (௨௬௰)

தாகந்தீரத்தண்ணீர்தான்கொடுத்தேனென்மேல் மோகங்கொண்டார்நானுங்கோபங்கொண்டேன் - தானும்வழி-கூடியிருட் - கானதனில்,யானும்வர தந்தியெனும்யானைவந்ததுவே. (௨௬௧)

ஆனைவருவதறிந்துவவர்பின்னே போனேனென் கிட்டேவராதேயென்றார்,அவராசையும் -நிறைவேறிட- வுறவாகினேன்-பெரிதாகிய-வானையுங்கானகஞ்சென்றதுவே. (௨௬௨)

சென்றபின்வேலவராறுமுகத்தொடுவந்தன னென்முன்காட்சியுடன,தெரிசித்திட.வேதந்தனர்- பரிசுத்தம- தாய்நின்றனர்- தேன்மொழியாளுள்ளசேதிசொன்னாள். (௨௬௩)

இப்படியென்றொருவார்த்தைநீ முன்சொன்னால்தப்பிதஞ் சொல்லமேமாதரசே- இனிதாயொரு- மனதாகவே- யுனைமேவிய,தனதாகின,ரெல்லோர்க்குநன்மைதானென்றுசொன்னார். (௨௬௪)

சந்தோஷமாகவேபாங்கியரிருவருங்கந்தன்மலர்க்கழல் தான்துதித்துச்-சரணாகதி-யெனைவென்றுமே- குருநாதனே- துணையென்றுயே-சாஷ்டாங்கமாகவேதெண்டனிட்டார். (௨௬௫)

தெண்டனிட்டபாங்கிமார் களைப்பார்த்துமே யண்டர்சிறைமீட்டவேலவரும்-தேனார்மொழி. மானார்களே- யானுலுமே-நானென்றுமே தேரியாமலேநீங்கள்செய்தபிழை. (௨௬௬)

உங்கள்மேமே குற்றங்களில்லையடிபாங்கிப் பெண்களா வெங்களிருவருக்கும்-உறவாகியே;வருவீரெனக்-குருவாகிய-துரைவேலவன்-உண்மைசொல்லப்பாங்கிமார்களுந்தான். (௨௬௭)

சாடையறிந்துவனம் போனார்கந்தன்பேடைமயில் வள்ளியாளுடனே- தருணம்மிது- தானென்றுமே-கருணையுகந் -தேகூடினர்-சல்லாபமாகவிருவருந்தான். (௨௬௮)

வள்ளியைக்கந்தன்மருவியக்கதை வாசித்துக் கேட்டுமெழுதினோரும்,வேலவனருளாலேமிகு-பேரும்பெற- ரோகவே - வாழ்ந்திருப்பார்கள்மனமகிழ்ந்தே. (௨௬௯)

முருகர்ஒயிற்கொம்மிப்பாடல்.

முற்றிற்று